**தும்பனே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 26 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 666,325 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கழிவுப் பொருள் கொட்டிலை நவீனமயமாக்க மற்றும் நீர் கருத்திட்ட அபிவிருத்திக்காக மேற் கொள்ளப்பட்ட ரூபா 2,349,607 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 7,836,120 கணக்குகளிற்கு எடுக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஜர்னல் குறிப்பினூடாக சரிசெய்கிறேன். |
| (ஈ) | நானாவித வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 414,166 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அட்டவணை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 02 கணக்கு விடய மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளிற்கிடையில் ரூபா 7,632,339 ஆன இனங்காமை நிலவியது. | வித்திதயாசத்தை இனங்கண்டு சீர் செய்யதல் மேற்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்து, கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பெற வேண்டிய கணக்குகள் | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 102,400 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான கிடைக்க வேண்டிய மீதிகள் ரூபா 1,445,526 ஆனது. | பெற வேண்டிய் தொகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள | | |
| ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,456,462 ஆனது. | கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஏனைய தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை

தகவலகள் முன்வைக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 1,025,187 ஆன 04 கணக்கு விடயங்களிற்காக அட்டவணை, கால பகுப்பாய்வு, மீதிகளின் பட்டியல்கள் என்பவற்றினை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.5 இணங்காமை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டம் | | | |
| (i) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 159(1) ஆம் பிரிவு | 190 ஆதனங்களிலிருந்து 01 ஆண்டிற்கும் 06 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் முதல் வீதவரி அறவிடப்படவில்லை. | சட்டத்தின் பிரிவுகளிற்கு இணங்க செயற்பட வேண்டும் | உள்ளூராட்சி ஆணையாளரை அறிவூட்டி அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | தேசிய சுற்றாடல் சட்ட நியமங்கள் பிரகாரம் பிரசுறிக்கப்பட்ட 2008 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட வர்த்தமானியின் ஏற்பாடுகள் | காலாவதியான 31 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த வர்த்தமானி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நி.பி 571 (3) | 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 871,347 பெறுமதியான வைப்புகளை விடுவிக்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் விடுவிக்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) ஏனைய சுற்றறிக்கைகள்

| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
|---|---|---|---|
| 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், பதிவேடுகளையும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,998,936 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,929,746 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,744,000 | 2,859,850 | 2,836,882 | 1,455,125 | 4,052,000 | 4,812,161 | 3,643,817 | 2,847,123 |
| (ii) | வாடகை | 4,595,000 | 4,742,053 | 4,785,104 | 661,500 | 4,973,000 | 5,232,842 | 4,691,325 | 704,552 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,530,000 | 1,633,627 | 1,633,627 | ---- | 2,695,500 | 2,409,146 | 2,469,146 | --- |
| (iv) | ஏனைய வருமானம | 9,642,000 | 1,071,445 | 27,001,951 | 3,074,387 | 9,909,000 | 12,063,083 | 5,487,167 | 17,944,713 |
| | கூட்டுத் தொகை | 18,511,000 | 10,306,975 | 36,257,564 | 5,191,012 | 21,629,500 | 24,577,232 | 16,291,455 | 21,496,388 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| அறவிடப்பட வேண்டிய ரூபா 190,361 ஆன வீதவரிக்காக 04 அலகு ஆதனங்களை தடை செய்வதற்கு இனங்கண்டிருந்த போதும், அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆளணி போதியதாக இல்லாததால், எதிர்பார்த்த பிரகாரம் செயற்பட முடியவில்லை என அறிவிக்கிறேன். |
| **(ஆ) குப்பை வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 623,120 ஆன வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(இ) நீர் கட்டணம்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 345,974 ஆன நீர் கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை தொகையை அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய முச்சக்கர வண்டி கட்டணம் ரூபா 1,287,773 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும. | நடமாடும் சேவையை நடாத்தி, முச்சக்கர வண்டி சங்கங்களினூடாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,440,678 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,836,120 ஆனது. | பெற வேண்டிய தொகையை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் பணத்தை வரவழைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

கைவிடப்பட்ட வேலைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுஜாதா மகளிர் வித்தியாலய முன்பக்கமாக வியாபாரக் கட்டிடத் தொகுதி நிர்மாணத்திற்காக ரூபா 2,076,510 கிரயம் மேற் கொள்ளப்பட்டு கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | கருத் திட்டத்தை சரியாக செயற்படுத்தி பூர்த்தி செய்ய வேண்டும். | ஒப்பந்தக்காரருடன் இருதரப்பினரினதும் இணக்கப்பாட்டின் மீது துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகள் தொடர்பாக ரூபா 103,289 இற்கு பிடியாணை கட்டணம் பில்லிடப்படாததனால் சபைக்கு பெற வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். | புற எழுச்சி மென்பொருளில் ஏற்பட்ட தவறு காரணமாக, கட்டணம் அறவிட முடியவில்லை என அறிவிக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் பற்றாக்குறையும் மிகையும் | | |
| 2019 திசெம்பர் 31 திகதியன்று சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் அறிவூட்டப்பட்டுள்ளதுட, எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மாதம் முதல் 26 மாத காலம் வரை குப்பை வரி செலுத்தாத உடன்படிக்கைக்குட்பட்ட 33 நிறுவனங்களிற்கு உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்து, முன்னேற்றத்தை சமர்பிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | சரத் அமுனுகம பொது வியாபார கட்டிட தொகுதியை குத்தகை வழங்குவது தொடர்பான குத்தகை நிபந்தனைகளின் பிரகாரம், 03 மாதங்களிற்கு விஞ்சிய காலம் மூடப்பட்டுள்ள 14 வியாபார நிலையங்கள் தொடர்பாக எந்தவொறு நடைமுறையையும் பின்பற்றி இருக்கவில்லை. | உடன்படிக்கை நிபந்தனைகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இக் காணியை முறையாக சபைக்கு ஒப்படைத்திருக்காததால், உடமையை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 07 நீர் கருத்திட்டங்கள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் குறிப்பிடப்படவில்லை. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு பதிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களம் வழங்கும் மதிப்பீட்டின் மீது நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.5.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சரத் அமுனுகம பொது வியாபார கட்டிட தொகுதியின் 47 கடையறைகளிலிருந்து கடந்த 05 ஆண்டுகளினுள் எவ்வித வருமானத்தையும் அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து பயன் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

#### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 695,559 பெறுமதியான 15 நிலையான சொத்து உருப்படிகள் 02 ஆண்டிற்கும் 19 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் முதல் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் நிலவின. | சொத்துகளினூடாக உச்ச பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பண்டக கணிப்பீட்டின் கீழ் இவ்வுருப்படிகளை ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.6 பெறுகைகள்

#### 3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆண்டினுள் ரூபா 74,703,059 ஆன மூலதன செலவினம் சபையினால் மேற்கொள்ளப்பட்ட போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வேத்தேவ ஹபுகொட ஊடாக மடிகே வரை செல்லும் பாலத்தை மற்றும் பாதையை அபிவிருத்தி செய்யும் வேலைக்குரிய ஆரம்ப மதிப்பீட்டின் படி, நிர்மாணிக்கப்படாத கைபிடி வரிசைக்காக ரூபா 77,726 தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாட்டிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | ஒப்பந்த சங்கத்தினை அறிவூட்டி கைபிடி வரிசையை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிபொருப்பு மற்றும் நள்ளாழுகை

### 4.1 தீர்க்கப்படாத அவதானிப்புகள் மற்றும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 – 3.1(அ)(ii) | | |
| 2010 ஆண்டில் ரூபா 350,000 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தளபரப்பு சீமேந்து கற்கள் கருத்திட்டம் 2014 ஆண்டு முதல் கைவிடப்பட்டிருந்தது. | கருத்திட்டத்தை சரியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக விலைகளை பெற்று ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |